## இவ்விருது தங்களின்

# கொள்கைப் பிடிப்பை மேலும் உறுதியாக்கும்!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச் செல்வன் கடிதம்!



**அன்புச் சகோதரர், தலைவர் ஸ்டாலின் அவர்களே,**

**அன்பான வணக்கம்,**

நமது தாய்க் கழகமான திராவிடர் கழகம் தஞ்சையில் நடத்திய முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது, கலைஞரது பன்முகத்தன்மைக்குக் கிட்டிய "நோபல் பரிசுக்குச்" சமமானது.

தாய்க்கழகம் நடத்திய இவ்விழாவில் திராவிட மாடல் நாயகரான தங்களுக்கு "சமூக நீதிக்கான சரித்திர நாயகர்" என்ற நல் ஆளுமை விருதை வழங்கி தங்களை கௌரவித்தது மெத்தப் பொருத்தமானது. விருது பெற்றமைக்கு வாழ்த்துகள்.

அந்த விருதினைப் பெற்றுக்கொண்டு தாங்கள் ஆற்றிய கொள்கை உரை மிகவும் போற்றத்தக்க வகையில் அமைந்தது. இவ்விருது, தங்களின் கொள்கைப் பிடிப்பை மேலும் மேலும் வளர்க்கும், உறுதியாக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

சரித்திர நினைவுகளை எடுத்துக்கூறியது, இளைய தொண்டர்கள் இயக்கத்தின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும்.

**நமது கழகம் ஆரம்பித்த அன்று அறிஞர் அண்ணா தனது பேச்சில் இரண்டு விஷயங்களை, தொண்டர்களுக்கும், தமிழகத்திற்கும் உறுதிபடத் தெரிவித்தார், முதலாவது "தாம் கொண்டதும், கண்டதும், ஏற்றுக் கொண்டதும் ஒரே தலைவர் தந்தை பெரியார்" என்றும், அதனைத் தொடர்ந்து "தி.க.வும், தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகத் திகழும்" என்று உறுதிபடத் தெரிவித்தார். அவரின் கூற்றை நிரூபிக்கும் வகையில் தாங்கள் தி.க.வும், தி.மு.க.வும் உயிரும், உணர்வும் போன்றது என்று பேசியது அருமையிலும் அருமை.**

1967 ஆம் ஆண்டு கழகம் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் முன்னர், திருச்சியில் தங்கியிருந்த தந்தை பெரியாரை, தனது தம்பிகளுடன் சென்று அவரைச் சந்தித்து அவரது ஆசியைக் கோரிவிட்டு "இந்த ஆட்சியே தந்தை பெரியாருக்கு காணிக்கை" என்று அறிஞர் அண்ணா அறிவித்தது போன்றே, திராவிட மாடல் ஆட்சிதான் தந்தை பெரியார், தந்தை பெரியார்தான் "திராவிட மாடல் ஆட்சியை ஆள்கிறார்" என்று தாங்கள் தெரிவித்தது கழகத்தின் கொள்கைப் பிரகடனம்.

தங்களது உரையில் ஒன்றிய அரசின் தீய உள் நோக்கங்களை, குறிப்பாக பாடுபட்டுப் பெற்ற இட ஒதுக்கீடு கொள்கைகள் எதிர் நோக்கும் ஆபத்துகளை, தமிழ்நாட்டின் நாடாளுமன்ற இடங்களைக் குறைக்க முயலும் செயல்களை தோலுரித்துக் காட்டியது மிகவும் அவசியமானது.

எதிர் வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான INDIA கூட்டணியை, கொள்கைக் கூட்டணி என்று வர்ணித்தது, கூட்டணியின் நோக்கத்தை மக்கள் நலன் சார்ந்தது என்று முரசொலித்தது சிறப்பு.

விருது பெற்றமைக்கு மீண்டும் வாழ்த்துகள், விருது அளித்து கௌரவித்த தாய்க்கழகத்திற்கும், ஆசிரியர் அய்யா அவர்களுக்கும் நன்றி, நன்றி.

வாழ்க, வெல்க தங்களின் சீரிய தமிழர் தொண்டு.

வெல்க INDIA கூட்டணி.

நட்புடன்,

**அ.அன்புச்செல்வன்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.10.2023) முகாம் அலுவலகத்தில், முதலமைச்சரின் பாதுகாப்பு பிரிவு காவல் கண்காணிப்பாளர் முனைவர் இரா.திருநாவுக்கரசு, எழுதிய "தன்னிலை உயர்த்து" என்ற நூலின் ஆங்கில மொழிப்பெயர்ப்பான "Best of You" என்ற நூலினை வெளியிட்டார். உடன் காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை தலைவர் (நுண்ணறிவு) டாக்டர் க.அ.செந்தில்வேலன், காவல்துறை துணைத் தலைவர் (நுண்ணறிவு) க.ராஜேந்திரன், குயின் மிரா சர்வதேச பள்ளியின் மேலாண்மை இயக்குநர் அபினாத் சந்திரன் மற்றும் முனைவர் இரா.திருநாவுக்கரசு அவர்களின் மனைவி திருமதி லாவண்ய ஷோபனா ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் தலைவர் துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருநெல்வேலி மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், மாநகர செயலாளர் சுப்பிரமணி, வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலைராஜா, கிழக்கு மாவட்ட தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் பிரபாகர், சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ்.இரவிச்சந்திரன் ராதாகிருஷ்ணன், துணை செயலாளர் பச்சையப்பன், தலைமை கழக வழக்கறிஞர் சரவணன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

